LIBRARY
04 MAR 2008
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## EXTERNAL DEGREE PROGRAMME

## PART - III EXAMINATION IN BUSINESS ADMINISTRATION/ COMMERCE 2000/2001

## BBA/ COM 401 (b) TAXATION

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 02 மணித்தியாலங்கள்

எடுகோள்கள் ஏதுமிருப்பின் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

---

01. திரு நியூட்டன் பெரேரா என்பவர் 15.04.2000ம் ஆண்டிலிருந்து பதுளை நகரில் "பதுளை ஸ்ரோர்" எனும் பெயரில் மொத்த வியாபாரத்திலீடுபட்டு வருகின்றார்.

இவ் வியாபாரத்தின் 31.03.2006ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் பின்வருமாறு :

குறிப்பு 1 : குறித்த வரிமதிப்பாண்டில் செலவுக்கு மிஞ்சிய தேறிய இலாபம் ரூபா 16,150,000/- ஆகும்.

குறிப்பு 2 : மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலாபத்தில் உள்ளடங்கியுள்ள ஏனைய வருமானங்கள் பின்வருமாறு :

| | | ரூபா |
|---|---|---|
| a) | பெற்ற பங்கிலாபம் (10% பிடிப்புவரி கழித்த பின்னர்) | 180,000 |
| b) | நிலையான வைப்பு வட்டி – தேறியது | 144,000 |
| c) | மோட்டார் வாகன விற்பனை இலாபம் | 110,000 |
| d) | களஞ்சிய, அலுவலக உபகரண விற்பனை இலாபம் | 65,000 |
| | | **499,000** |

குறிப்பு 3 : வியாபாரத்திலுள்ள சொத்துக்களின் விபரம் பின்வருமாறு :

| சொத்துக்கள் | 01.04.2005ல் மீதி (ரூபா) | புதிய கொள்வனவு | விற்பனை (ரூபா) | 31.03.2006ல் மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| காணி | 1,000,000 | -- | -- | 1,000,000 |
| கட்டடம் | 4,000,000 | -- | -- | 4,000,000 |
| மோட்டார் வாகனம் | 3,500,000 | -- | (500,000) | 3,000,000 |
| இயந்திரம் | 2,800,000 | -- | -- | 2,800,000 |
| அலுவலக தளபாடங்கள் | 1,200,000 | 300,000 | -- | 1,500,000 |
| களஞ்சிய அலுவலக உபகரணம் | 1,800,000 | 700,000 | (650,000) | 1,850,000 |
| கணனி மென் பொருள் | 900,000 | 100,000 | -- | 1,000,000 |
| | **15,200,000** | **1,100,000** | **(1,150,000)** | **15,150,000** |

பெறுமானத்தேய்வு விபரம் :

| சொத்துக்கள் | 01.04.2005ல் மீதி (ரூபா) | நடப்பாண்டு பெறுமானத் தேய்வு | விற்பனை (ரூபா) | 31.03.2006ல் மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| காணி | -- | -- | -- | -- |
| கட்டடம் | 215,000 | 335,000 | -- | 550,000 |
| மோட்டார் வாகனம் | 560,000 | 680,000 | (280,000) | 960,000 |
| இயந்திரம் | 900,000 | 850,000 | -- | 1,750,000 |
| அலுவலக தளபாடங்கள் | 100,000 | 215,000 | -- | 315,000 |
| களஞ்சிய அலுவலக உபகரணம் | 145,000 | 315,000 | (45,000) | 415,000 |
| கணனி மென் பொருள் | 200,000 | 450,000 | -- | 650,000 |
| | **2,120,000** | **2,845,000** | **(325,000)** | **4,640,000** |

மேலதிக தகவல்கள் :

i) வியாபாரத்திற்கு பயன்படுத்தப்படும் கட்டணமானது வ/ ஆ. 2004/ 2005 ல் கட்டப் பட்டதாகும்.

ii) மோட்டார் வாகன ஆரம்ப மீதி 02.04.2000ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட லொறியொன்றையும், மீதி முறையே ரூபா 1,500,000/- கிரயத்தில் 2003ம் ஆண்டு கார்த்திகை மாதம் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு லொறிகளுமாக மொத்தம் மூன்று லொறிகளதும் கிரயமாகும்.

இவற்றுள் முதலாவதாக கொள்வனவு செய்யப்பட்ட லொறியானது இவ் வரிமதிப்பாண்டுள் விற்பனை செய்யப்பட்டது.

iii) ஆரம்ப மீதியிலுள்ள அனைத்து அலுவலக தளபாடங்களும் வியாபாரம் ஆரம்பிக்க மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

iv) ஆரம்ப மீதியிலுள்ள அலுவல... ...காரணங்கள் 2000ம் ஆண்டு சித்திரை மாதம் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

v) ஆரம்ப மீதியிலுள்ள கணனி மென்பொருட்கள் 2005ம் ...டு தை மாதம் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

குறிப்பு 4 :

தேறிய இலாபக் கணிப்பின் போது பின்வரும் செலவுகளும் கழிக்கப்பட்டிருந்தது. (இவற்றுள் எவையாவது அனுமதிக்கக் கூடிய அல்லது அனுமதிக்க முடியாமைக்கான காரணங்கள் கொடுக்கப்பட வேண்டும்)

i) பிரயாணச் செலவு

பிரயாணச் செலவினுள் கொள்வனவுப் பிரிவு முகாமையாளர் வியாபாரம் தொடர்பாக இந்தியா சென்றுவந்தது தொடர்பான செலவு 300,000/-

ii) சட்டச் செலவு – 200,000/-

| | | |
|---|---|---|
| • வியாபாரக் கடன் அறவீடு தொடர்பாக சட்டத்தரணிக்கு | 25,000/- | |
| • காசு இழப்பு காரணமாக சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ள காசாளரால் ஏற்பட்ட இழப்பீட்டு அறவீடு தொடர்பான வழக்குச் செலவுக்காக | 75,000/- | 200,000/- |

iii) நன்கொடை – 300,000/-

| | | |
|---|---|---|
| • அரச அங்கீகாரம் பெற்ற தர்மஸ்தாபனத்திற்கு | 65,000/- | |
| • வன்செயலால் இடம்பெயர்ந்த சிறுவர்கட்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கியது | 235,000/- | 300,000/- |

iv) ஊழியர்கள் சுற்றுலா சென்றது தொடர்பாக 250,000/-

v) பணிக்கொடை ஒதுக்கம்

| | | |
|---|---|---|
| 01.04.2005 ல் ஒதுக்க மீதி | 125,000/- | |
| 31.03.2006 ல் ஒதுக்க மீதி | 245,000/- | 120,000/- |

vi) காசு இழப்பு

வங்கி கணக்கு இல்லாத வழங்குனர் ஒருவருக்கு அடுத்தநாள் செலுத்துவதற்காக பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பணம் களவாடப்பட்டது 120,000/-

vii) அறவிடமுடியாக் கடன், ஐயக் கடன்

| | |
|---|---|
| • இவ்வாண்டு அறவிடப்பட முடியாதது எனத் தீர்மானிக்கப்பட்ட கடனொன்று பதிவழிக்கப்பட்டது | 75,000/- |
| • நடப்பாண்டில் திரு. சுமணபாலாவின் கடனை அறவிடுவதில் ஐயப்பாடுள்ளதால் விசேட ஏற்பாடு | 125,000/- |
| • ஏனைய ஐயக்கடன்களுக்கான பொது ஒதுக்கம் | 85,000/- |
| | **285,000/-** |
| கழி : ஏற்கனவே பதிவழிக்கப்பட்ட கடனொன்று மீள இவ்வாண்டில் கிடைத்தது | (40,000) |
| | **245,000/-** |

LIBRARY
04 MAR 2008
Eastern University, Sri Lanka.

viii) வருமானவரி செலுத்த தாமதித்ததற்கான தண்டப்பணம் 15,000/-

ix) மொத்த பெறுமானத் தேய்வு ஏற்பாடு 2,845,000/-

x) கேளிக்கைச் செலவுகள் 215,000/-

மேற்படி தகவல்களைக் கொண்டு திரு நியூட்டன் பெரேரா அவர்கள் வ/ ஆ 2005/ 2006 க்கு செலுத்த வேண்டிய வருமானவரியைக் கணிப்பிடுக.

**(45 புள்ளிகள்)**

02. திரு சுந்தரம் என்பவர் அரசசேவையில் "சிரேஷ்ட கணக்காளர்" நிலையிலிருந்து ஓய்வு பெற்றபின், 01.04.2005 இலிருந்து "வைப்பகம்" எனும் தனியார் வங்கியொன்றில் முகாமை இயக்குனராக வேலை செய்கிறார். தனது மனைவியிடமிருந்து சட்டப்படி விவாகரத்து பெற்றுள்ள இவருடன் இவர்களது பதினேழு வயது மகனும் வாழ்ந்து வருகின்றார்.

31.03.2006 ல் முடிவுற்ற ஆண்டுக்கான இவரது வருமான, செலவு விபரங்கள் பின்வருமாறு :

a) பணரீதியான நன்மைகள்

| | | ரூபா |
|---|---|---|
| அரச ஓய்வூதியம் | | 350,000 |
| தனியார் வங்கியிலிருந்து ஆண்டுச் சம்பளம் | | 1,080,000 |
| உபகாரக் கொடுப்பனவு | | 50,000 |
| கேளிக்கைக் கொடுப்பனவு (செலவு செய்தது 43185/-) | | 100,000 |
| உத்தியோகபூர்வ பிரயாண மீள்நிரப்பல் | | 113,000 |
| | | **1,693,000** |
| கழிப்பனவுகள் : | | |
| சேமலாபநிதிக்கான பங்களிப்பு | 86,400 | |
| உழைக்கும்போதே செலுத்தும் வரி (PAYE) | 36,000 | |
| விளையாட்டுக்கழக உறுப்பினர் கட்டணம் | 1,200 | |
| வீட்டுக்கடன் தவணைப் பணம் - முதல் | 124,000 | |
| வீட்டுக்கடன் தவணைப் பணம் - வட்டி | 84,000 | (331,600) |
| | | **1 ,361,400** |

b) பணரீதியற்ற நன்மைகள்

ஆண்டுப் பெறுமதி 40,000/- யும் சோலைவரி 30% மாகவும் கொண்ட வீடொன்றை வங்கி மாதம் 20,000/- வாடகைக்குப் பெற்றிருந்தது. இதனை இம் முகாமை இயக்குனருக்கு மாதம் ரூபா 10,000/- க்கு வசிப்பதற்கு கொடுக்கப்பட்டிருந்தது.

c) பங்கிலாப வருமானம்

வ/ ஆ 2005/ 2006 ல் "அம்றோ" லிமிடெட்டிலிருந்து கிடைத்த பங்கிலாப விபரம் வருமாறு :

| | |
|---|---|
| வரிவிலக்குப் பெற்ற இலாபத்திலிருந்து | 150,000 |
| 10% வரி கழித்த பின் கம்பனி இலாபத்திலிருந்து செலுத்தியது | 198,000 |
| 10% பிடிப்பு வரி கழிக்கப்பட்ட பின்னர் கிடைத்த பங்கிலாபத்திலிருந்து | 90,000 |
| | **438,000** |

d) வட்டி வருமானம் :

- செலான் வங்கியிலுள்ள நிலையான வைப்பு ஒன்றிலிருந்து 10% பிடிப்புவரி கழித்த பின்னர் கிடைத்த தேறிய வருடாந்த வட்டி 121,500/-.
- அவரது உறவினர் ஒருவருக்கு கடனாக கொடுத்துள்ள பணத்தின் சார்பாக இவ்வாண்டு கிடைத்த வட்டி 80,000/-.
- இவருக்கு கிடைத்த திரட்டிய ஓய்வூதியத்தில் (Commuted Pension) ஒரு பகுதியாகிய ரூபா 1,000,000/- னை அவரது மகனின் பெயரில் 01.07.2005 ல் சேமிப்பு வைப்பில் இட்டுள்ளார். இவ்வைப்புக்காக மாதாந்தம் திரு. சுந்தரத்தின் நடைமுறைக் கணக்குக்கு ஆண்டு வட்டி 11.2% செலவு வைக்கப்பட்டது.

e) ஆதனங்கள் மூலமான வருமானம்

2002 ம் ஆண்டு ஆனி மாதம் பூர்த்தியாக்கப்பட்ட 2200 சதுர.அடி பரப்பளவுள்ள இவரது முதலாவது வீட்டினை 01.07.2004 லிருந்து அனீஸ் என்பவருக்கு மாதாந்தம் 20,000/- வாடகைக்கு கொடுத்துள்ளார். 2005 ஆடி மாதத்திலிருந்து மேலும் ஒரு வருடத்திற்கு மாதாந்தம் ரூ 25,000/- க்கு வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது.

இவ்வீட்டுக்கு சோலைவரியாக ரூ. 12,000/- செலுத்துகிறார்.

2005 ஆடி மாதத்தில் வர்ணம் பூசுவதற்காக ரூபா 38,000/- னை செலவு செய்துள்ளார்.

f) ஏனைய கொடுப்பனவுகள்

| | |
|---|---|
| கார்க்கடன் மீள்செலுத்துகை (கடன் தொகையில்) | 100,000 |
| கார்க் கடன் மீதான வட்டி | 24,000 |
| மனைவிக்கு (நீதிமன்ற ஆணைப்படி) பராமரிப்பு கொடுப்னவு | 120,000 |
| மகனின் பாடசாலைக் கட்டணம் | 24,000 |

LIBRARY

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட தர்மஸ்தாபனத்திற்கு நன்கொடை | 20,000 |
| தனது கிராமத்து கோயிலுக்கு நன்கொடை | 10,000 |
| ஆயுட் காப்புறுதிக் கொடுப்பனவு | 100,000 |
| ஏனைய வீட்டுச் செலவுகள் | 480,000 |

வ/ ஆ 2005/ 2006 க்கு திரு சுந்தரம் அவர்கள் செலுத்த வேண்டிய வரியைக் கணிப்பிடுக.

**(30 புள்ளிகள்)**

03. பின்வருவனவற்றுள் ஏதாவது ஐந்திற்கு சிறு குறிப்பு எழுதுக..

(i) "வரிமதிப்பாண்டு"

(ii) அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) மீதான வரிப்பொறுப்பு

(iii) "பொருளாதார சேவைகள் விதிப்பனவு (ESC) "

(iv) "நிறுத்தி வைத்தல் வரி (WHT) "

(v) "வரி விதிப்பனவுகள் மீதான காலஎல்லை" (Time bar on Assessment)

(vi) பெறுமதி சேர் வரி தொடர்பாக "வெளியீட்டு வரி" (Out put tax), "உள்ளீட்டு வரி" (In put tax) என்றால் என்ன?

(vii) "சமூகப் பொறுப்பு விதிப்பனவு" (Social Responsibility Levy - SRL)

**(05 x 05 = 25 புள்ளிகள்)**